## நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 13, 2016

1. எந்த குழு வறுமையை ஒழிப்பதற்காக ஒரு வரைபட அறிக்கையை சமீபத்தில் சமர்ப்பித்துள்ளது ?
A. HR கான் குழு
B. அரவிந்த் பனகாரியா குழு
C. பிபேக் டெப்ராய் குழு
D. விவேக் டெப்ராய் குழு

**விடை : B. அரவிந்த் பனகாரியா குழு**

வறுமையை வரையறுக்க மற்றும் வறுமையை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட அரவிந்த் பனகாரியா குழு தனது அறிக்கையை சமீபத்தில் பிரதமர் அலுவலகத்தில் (PMO) சமர்ப்பித்துள்ளது மற்றும் வறுமை கோட்டிற்கு (BPL) கீழே உள்ள நபர்களை அடையாளம் காண குழு அமைக்க பரிந்துரைத்துள்ளது. வறுமை கோட்டிற்கு (BPL) கீழே உள்ள நபர்களை அடையாளம் காண மாநிலங்கள் இதில் பங்கேற்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. "2016 Yudh Abhyas" எனப்படும் கூட்டு இராணுவ பயிற்சி இந்தியாவிற்கும் எந்த நாட்டுக்குமிடையே நடத்தப்படும்?
A. ஐக்கிய ராஜ்யம்
B. ஜெர்மனி
C. பிரான்ஸ்
D. அமெரிக்கா

**விடை : D. அமெரிக்கா**

"2016 Yudh Abhyas" எனப்படும் கூட்டு இராணுவ பயிற்சி இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே செப்டம்பர் 14-27 வரை உத்தரகண்டின் சௌவ்பாட்டியாவில் நடத்தப்படும். இப்பயிற்சியின் நோக்கம், ஐ.நா.பட்டயத்தின் கீழ், மலைப்பாங்கான பகுதியில் கிளர்ச்சியையும் பயங்கரவாதத்தையும் எதிர்ப்பதற்காக இரு நாடுகளும் இணைந்து ஒத்திகை செய்து பார்ப்பதாகும்.

3. ஜதியாதேவியில் ஒருங்கிணைந்த ஸ்மார்ட் டவுன்ஷிப்பை உருவாக்க, இமாசலப் பிரதேச அரசாங்கம் சமீபத்தில் எந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது ?
A. ஜப்பான்
B. சிங்கப்பூர்
C. சீனா
D. மலேஷியா

**விடை : B. சிங்கப்பூர்**

சிம்லா விமான நிலையம் அருகேயுள்ள ஜதியாதேவியில் ஒரு ஒருங்கிணைந்த ஸ்மார்ட் டவுன்ஷிப்பை உருவாக்க இமாசலப் பிரதேச அரசாங்கம் சமீபத்தில் சிங்கப்பூர் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது.

4. இந்திய அரசு (GOI), பதிவு தபால் புகார்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ள கட்டணமில்லா எண் என்ன ?
A. 1924
B. 1926
C. 1928
D. 1927

**விடை : A. 1924**

இந்திய அரசு (GOI), பதிவு தபால் புகார்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ள கட்டணமில்லா எண் '1924' ஆகும். ஆரம்பத்தில், வேலை நாட்களில் 0800 மணி முதல் 2000 மணி வரை மொத்தம் 12 மணி நேரம் இந்த சேவை வழங்கப்படும் மற்றும் இந்த சேவை இந்தி, ஆங்கிலம், மலையாளம் ஆகிய 3 மொழிகளில் கிடைக்கும். எதிர்காலத்தில், அனைத்து இந்திய மொழிகளிலும் சேவைகள் தொடங்கும்.

5. 2016 துராந்த் கால்பந்து கோப்பை கைப்பற்றிய அணி எது ?
A. Army Red
B. Sporting Goa
C. Army Green
D. DSK Shivajians

**விடை : C. Army Green**

Army Green அணி, புது தில்லியில் நடைபெற்ற 2016 துராந்த் கால்பந்து போட்டியில் Neroca FC அணியை பெனால்ட்டி shoot out முறையில் வீழ்த்தி வெற்றி பெற்றது. துராந்த் கோப்பை இந்தியாவின் மதிப்புமிக்க ஒரு கால்பந்து போட்டி, ஆசியாவின் பழமையான போட்டி மற்றும் இங்கிலாந்து கால்பந்து கூட்டமைப்பு கோப்பை மற்றும் ஸ்காட்லாந்து கால்பந்து சங்க கோப்பைக்குப் பிறகு உலகின் 3வது பழமையான போட்டியாகும்.

6. 2016 ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டியில் வெள்ளி வென்ற தீபா மாலிக், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?

A. பூப்பந்து
B. குண்டு எறிதல்
C. லாங் ஜம்ப்
D. வில்வித்தை

**விடை : B. குண்டு எறிதல்**

2016 ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டியில் பெண்களுக்கான குண்டு எறிதல் F-53 போட்டியில் இந்தியாவின் தீபா மாலிக் வெள்ளி பதக்கம் வென்றார். இதன் மூலம், பாராலிம்பிக்ஸ் போட்டியில் பதக்கம் பெறும் முதல் இந்திய பெண் என்ற பெருமையை பெறுகிறார். இத்துடன் சேர்த்து இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 பதக்கங்களை பெற்றுள்ளது. இவருக்கு முன், இந்த பாராலிம்பிக்ஸ்சில் ஆண்கள் உயரம் தாண்டுதலில் மாரியப்பன் தங்கவேலு தங்கமும், வருண் சிங் பாட்டி வெண்கலமும் வென்றுள்ளனர்.

7. இந்தியாவின் எந்த நகரத்தில், நகர்ப்புற மாற்றம் குறித்த 2016 பிரிக்ஸ் மாநாடு நடைபெற்றது ?

A. விசாகப்பட்டினம்
B. உதய்பூர்
C. மும்பை
D. கொச்சி

**விடை : A. விசாகப்பட்டினம்**

நகர்ப்புற பிரிவுகளில் உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பை ஊக்குவிக்க, நகர்ப்புற மாற்றம் குறித்த 2016 பிரிக்ஸ் மாநாட்டின் 3 வது பதிப்பு ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. 3 நாள் நடைபெறும் இந்த நிகழ்வில், பல்வேறு நாடுகளின் நகர திட்டமிடுவோர், நிபுணர்கள் மற்றும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா-வில் இருந்து மற்ற பிரதிநிதிகளும் செப்டம்பர் 14 முதல் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

8. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் ஏவவுள்ள “Pratham” எனும் மைக்ரோ செயற்கைக்கோளை எந்த ஐஐடி கல்லூரி உருவாக்கியது ?

A. ஐஐடி இந்தூர்
B. ஐஐடி சென்னை
C. ஐஐடி ரூர்க்கி
D. ஐஐடி பாம்பே

**விடை: D. ஐஐடி பாம்பே**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), ஐஐடி பாம்பே கல்லூரி உருவாக்கிய “Pratham” எனும் மைக்ரோ செயற்கைக்கோளை ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஸ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் ஏவவுள்ளது. ஐயனோஷ்பியரில் உள்ள மொத்த எலக்ட்ரான் எண்ணிக்கையை அளவிட தயாரிக்கப்பட்ட இந்த 10 கிலோ எடை கொண்ட செயற்கைக்கோளை இஸ்ரோவின் நான்கு கட்ட போலார் எஸ்.எல்.வியை (பி.எஸ்.எல்.வி.) மூலம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

9. "Hot Milk" எனும் புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

A. அருந்ததி ராய்
B. நிகுந்த் சர்மா
C. அரவிந்த் அடிகா
D. டெபோரா லெவி

**விடை : D. டெபோரா லெவி**

"Hot Milk" எனும் புத்தகம், டெபோரா லெவி என்பவரால் எழுதப்பட்டது. இது, ஒரு சிறிய ஸ்பானிஷ் மீன்பிடி கிராமத்தில் வசிக்கும் வியாதியுள்ள அம்மா மற்றும் அவரது மகளின் இடையே உள்ள ஆழ்ந்த உறவு பற்றிய கதையாகும்.

10. 2016 சர்வதேச பௌத்த பாதிரிகள் மாநாடு எந்த நாட்டில் நடைபெற உள்ளது ?

A. பூட்டான்

B. இலங்கை

C. சீனா

D. இந்தியா

**விடை : D. இந்தியா**

புத்தகயா மற்றும் சாரநாத்தில் உள்ள புத்த தளங்களை மேம்படுத்த, 2016 சர்வதேச பௌத்த பாதிரிகள் மாநாடு அக்டோபர் 3, 2016 ல் இருந்து உத்தரப் பிரதேசத்தின் சாரநாத்தில் நடைபெற உள்ளது.